1984 மார்ச் 27] [மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா]

இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல் தாராபுரத்தைப் பொறுத்தவரையில் 336.30 ஏக்கர் நிலம் தேவைதானா என்ற கேள்வி சட்டமன்றத்திலே எழுப்பப்பட்ட பிறகு அதை பரிசீலனைக்கு எடுத்து அதிகமான நிலங்களை கையகப்படுத்திக்கொண்டு பின்னால் கைவிடுகின்ற நிலைமை இல்லாமல் எந்த அளவுக்கு தேவையோ அந்த அளவுக்கு மட்டும் கையகப்படுத்தியதற்குப் பிறகு வீடுகள் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ஈரோடு கருங்கல்பாளையத்திலே 288 வீடுகள் கட்டப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் ஈரோடு நகரத்திலே நெருப்புப் பிடித்து பல குடிசைகள் எரிந்து போனதே அதையும் அந்த வீடுகட்டும் திட்டத்தில் சேர்த்து வீடுகள் கட்டப்படும் என்று அங்கே இருக்கிறவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தத் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, கருங்கல் பாளையத்தில் 288 வீடுகள் கட்டப்பட உள்ளன. அங்கே புதிய திட்டங்களையும் எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முயற்சியும் வெற்றிதரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. புதிதாக வீடுகள் கட்டவும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்னையில் கதர்க் கடைகள் திறக்கும் திட்டம்.

*481—(வினா எண் 20648) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்த்தொழில் வாரியம் இளைஞர் சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் சென்னையில் கதர்க் கடைகளைத் திறந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதனால் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள் எத்தனைபேர் ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்காக கடைகளை திறப்பதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்ததால்தான் நான் இந்தக் கேள்வியை கேட்டேன். இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இல்லையென்றால் இனிமேலாவது ஆரம்பிப்பதற்கு துறையிடம் குறிப்புள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டபடி இங்கே கடைகள் இருக்கின்றன. இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கதர் கடைகள் அல்ல. வாரியத்தின்மூலமாக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களிலே உள்ள கை வினைஞர்களுக்கும் படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டத்தில் 20 நவீனக் கூடங்கள் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தக் கூடங்களின் வண்ண அமைப்பு (National Institute of Designs) என்ற நிறுவனத்தால் அமைக்கப்பட்டது. அந்தக் கூடங்கள் 14-3-1984 அன்று திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, 20 கூடங்கள் திறந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 20 கூடங்களிலே எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன? எல்லா மாவட்டத் தலை நகர்களிலேயும் இந்த வேலைவாய்ப்பு ஏற்பாடுகளைச்செய்ய துறை நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு கூடமும் ஒவ்வொரு நபருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அதைப்போல் பலவிதப் பொருள்கள் விற்பனைப் பொருள்கள் கிராமத் தொழில் உற்பத்தியை அதிகப்படுத்தவும் கிராமத் தொழில் பொருட்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதால் கிராமத் தொழில் உற்பத்தியை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக கிராமங்களிலே வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறவர்களுக்கு அதிக வேலை கொடுப்பதற்காகவும் பெட்டிக் கடைகளை ஏற்படுத்துவதற்கு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களை நியமித்து ஒவ்வொருவருக்கும் ஒரு கடை கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS